# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

EDB SRI LANKA

**நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**

# வெற்றிடங்கள்

கீழ் குறிப்பிடப்பட்ட பதவி நிலைகளுக்காக சபையின் சேவையில் இணைவதற்கு நிரூபிக்கப்பட்ட திறன் மற்றும் தொழில்முறை திறமைகளுடன் தகுதியுடைய மற்றும் அதிக ஊக்கம் கொண்ட இலங்கை பிரசைகளிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## (01) உள்ளக கணக்காய்வாளர் பதவி (MM 1-1)

**பணி விபரம்:**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் (EDB) உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல். சபையின் அனைத்து நிதி பரிவர்த்தனைகளையும் கணக்காய்வு செய்தல். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்: (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ வர்த்தகம்/ நிதி/ வர்த்தக முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகத் துறையில் இளமாணிப் பட்டம்

   **மற்றும்**

   அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற தனியார்துறை நிறுவனம் ஒன்றில் முதல் பட்டத்தைப் பெற்ற பின், பதவிக்கு தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.
2. பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**சம்பள அளவு :** ரூபா 53,175/= – 10 x 1375 -15 x 1910 – 95,575/=

EPF – ஊழியர் – 10% ; சபை – 15% மற்றும் ETF – சபை 3%.

**தேர்வு முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவில்

**வயதெல்லை :** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## (02) உள்ளக கணக்காய்வு அதிகாரி பதவி (JM 1-1)

**பணி விபரம்:**

நிதியுடன் தொடர்புபட்ட அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரி பரிவர்த்தனைகளுக்கு தொடர்புடைய, EDB, உள்ளக கணக்காய்வு பிரிவு தலைவரின் மேற்பார்வையின் கீழ் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல். அமைப்பில் உள்ள நிதி பரிவர்த்தனைகள் மற்றும் ஏதேனும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்: (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ வர்த்தகம்/ நிதி/ வர்த்தக முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகத் துறையில் இளமாணிப் பட்டம்
2. பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**சம்பள அளவு :** ரூபா 42,600/= 10 x 755 18 x 1135 Rs. 70,580/=

EPF – ஊழியர் – 10% ; சபை – 15% மற்றும் ETF – சபை 3%.

**தேர்வு முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவில்

**வயதெல்லை :** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## (03) ஒளிப்பதிவாளர்/வீடியோ தொழில்நுட்பவியலாளர் பதவி (MA 2-1)

**பணி விபரம்:**

EDB மூலம் கையாளப்படும் அனைத்து வீடியோ பதிவு செயற்பாடுகளிலும் வீடியோ ஒளிப்பதிவாளராக செயற்படுதல். உபகரணங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல். புகைப்படப்பிடிப்பு வேலையை மேற்கொள்ளல் மற்றும் தேவையின்போது ஸ்லைட் தயாரித்தல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**தொழிற்கல்வி**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பு ஒன்றில் தேசிய தொழில் தகைமை (NVQ) தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

## (04) பணியாளர் உதவியாளர் பதவி (போக்குவரத்து) (MA 2-1)

**பணி விபரம்:**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வாகனங்களுக்கு தொடர்புடைய வாகன பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் நன்னிலைப்படுத்தலுக்கான கொடுப்பனவு வவுச்சர் தயாரித்தல் வாகன பராமரித்தல் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வாகனங்களை பழுதுபார்த்தல். எரிபொருள் கொள்வனவுக் கோரலை வெளியிடல் மற்றும் எரிபொருள் ஏற்றலை கண்காணித்தல். வாகனங்களை செலுத்தும் பதிவுடன் எரிபொருள் விலைப்பட்டியலை பரீட்சித்தல். ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வாகன இருப்பு மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பில் ஆவணம் ஒன்றை பேணுதல். மேற்பார்வை அதிகாரிகளினால் வழங்கப்பட்டிருக்கும் எந்த ஒரு பணியிலும் பங்கேற்றல். வாகன தொகுதி மற்றும் பதிவுப் புத்தகத்தை பேணுதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**தொழிற்கல்வி**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பு ஒன்றில் தேசிய தொழில் தகைமை (NVQ) தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

**சம்பள அளவு :** MA 2-1 (3) மற்றும் (4): ரூபா 30,310/- 10 x 300 – 7 x 350 – 4 x 495 – 20 x 660 = ரூபா 50,940/=

EPF – ஊழியர் – 10% ; சபை – 15% மற்றும் ETF – சபை 3%.

**தேர்வு முறை :** (3) மற்றும் (4): கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவில்

**வயதெல்லை :** (3) மற்றும் (4): 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## (05) MOTOR MECHANIC CUM DRIVER (PL 2-1)

**பணி விபரம்:**

வழிநடத்தப்பட்ட மற்றும் தேவையின்படி EDB இன் மோட்டார் வாகனங்களின் சிறிய பழுதுபார்த்தல் வேலைக்கு தோன்றல். வாகனங்களின் கோளாறுகளை பரீட்சித்த பின் EDB வாகனங்களின் பெரிய அளவான பழுதுபார்த்தல்களுக்கு பரிந்துரைத்தல். தேவை ஏற்படும்போது வாகனங்களை ஓட்டுதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**தொழிற்கல்வி**

மோட்டார் பொறிமுறை செயற்பாடுகளுக்கு தொடர்புடைய மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) தரம் நான்கிற்கு (04) குறையாத தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

**சம்பள அளவு :** ரூபா 26,290/= 10 x 270 – 10 x 300 – 10 x 330 – 12 x 350 - ரூபா 39,490/=

EPF – ஊழியர் – 10% ; சபை – 15% மற்றும் ETF – சபை 3%.

**தேர்வு முறை :** வர்த்தகச் சோதனை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவில்

**வயதெல்லை :** 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மேலுள்ள பதவிகளுக்கு பொருந்தும் மற்ற தகைமைகள்**

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**

மேலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்தவராக நீங்கள் இருந்தால், ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 8ஆவது மாடியில் உள்ள மனித வளங்கள் முகாமைத்துவ பிரிவில் இருந்து அல்லது www.srilankabusiness.com (“announcements” இன் கீழ்) என்ற இணையதளத்தில் இருந்து பெறப்பட்ட விண்ணப்பம் ஒன்றில் 2024.12.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரி, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். EDB வடிவத்தில் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள், தொடர்புடைய தகைமைகள் இன்றி மற்றும் முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் நிறுவனத்தின் குறித்த தலைவர்களின் ஊடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தின் மேலதிக பிரதி ஒன்றை விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு முன்னர் தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும்.

2020.10.26 இன் 2/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய இந்த வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாதிருக்கும் அதிகாரம் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தலைவர்/தலைமை நிர்வாக அதிகாரி,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை,**
**NDB-EDB கோபுரம், இல. 42,**
**நவம் மாவத்தை, கொழும்பு 02.**
**தொ.: 011-2300700**